
தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது
# தின கனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 175 | 4 Pages | 22.1.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 175 | 4 பக்கங்கள் | 22.1.2025 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**செய்யாமற் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்**
**உய்யா விழுமந் தரும்**

**விளக்கம்:** தான் ஒன்றும் செய்யாதிருக்கத் தனக்குத் தீங்கு செய்தவர்க்கும் துன்பமானாவற்றைச் செய்தால் செய்தபிறகு தப்பமுடியாத துன்பத்தையே கொடுக்கும்.

# காரைக்குடியில் 'வளர் தமிழ்' நூலகம்: முதல்அமைச்சர் திறந்து வைத்தார்






சிவகங்கை, ஜன.22

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற விழாவில், முன்னாள் மத்திய மந்திரியும், நாடாளுமன்ற உறுப்பினருமான ப. சிதம்பரத்தின் சொந்த நிதியில் 12 கோடி ரூபாய் செலவில் அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் கட்டப்பட்டுள்ள திருமதி லக்ஷ்மி வளர்தமிழ் நூலகத்தை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைத்து மாணவர்களின் பயன்பாட்டிற்காக அர்ப்பணித்தார்.

திருமதி லக்ஷ்மி வளர்தமிழ் நூலகம்செட்டிநாடுகட்டடக்கலையை பிரதிபலிக்கும் வகையில் 31 ஆயிரம் சதுர அடி பரப்பளவில், கீழ் தளம், தரைத் தளம் மற்றும் முதல் தளத்துடன் கட்டப்பட்டுள்ளது. கீழ் தளத்தில் கம்பர் நூலக அறை, தொல்காப்பியர் அரங்கமும், முதல் தளத்தில் திருவள்ளுவர், இளங்கோவடிகள் நூலக அறைகளும் இணையதள வசதியுடன் கூடிய மின் நூலகம், சிறு கூட்டரங்கமும் அமைக்கப்பட்டுள்ளன. நூலகத்தில்சுமார்ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல்களை வைப்பதற்கான இடம் உள்ளது. மேலும், நூலகத்தில் மின்தூக்கி வசதியும், குளிர்சாதன வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

அதனை தொடர்ந்து அழகப்பா பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள நிர்வாக தொகுதியின் முகப்பில், அழகப்பா பல்கலைக்கழக முன்னாள் மாணவர்களின் நிதி பங்களிப்பில் 5 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலையை முதல்அமைச்சர் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாக் கலையரங்கக் கருத்தரங்கக் கூடத்திற்கு "வீறுகவியரசர் முடியரசனார் அரங்கம்" என்று பெயர்சூட்டப்பட்டது. மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா தேசியக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள் தொகுப்பு நூலை முதல்அமைச்சர் வெளியிட, அழகப்பா பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் க.ரவி பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, முனைவர் கவிஞர் அண்ணாதாசன் எழுதிய "மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் பிள்ளைத்தமிழ்" என்னும் நூலை முன்னாள் மத்திய நிதி மந்திரி ப. சிதம்பரம் வெளியிட, அழகப்பா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் க.ரவி பெற்றுக் கொண்டார்.

## அமெரிக்க அதிபராக பதவியேற்ற டிரம்பிற்கு பிரதமர் மோடி வாழ்த்து



புதுடெல்லி, ஜன.22

அமெரிக்காவின் 47வது அதிபராக டொனால்டு டிரம்ப் பதவியேற்றுக்கொண்டார். இந்திய நேரப்படி இரவு 10.30 மணிக்கு அமெரிக்க அதிபராக பதவியேற்றார். அவருக்கு அமெரிக்க சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி ராபர்ட்ஸ் ஜுனியர், டிரம்புக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்துள்ளார்.

இந்த நிலையில், அமெரிக்காவின் புதிய அதிபராக பதவியேற்றுக்கொண்டுள்ள டிரம்பிற்கு உலக தலைவர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில், பிரதமர் மோடியும் டிரம்பிற்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

அமெரிக்காவின் 47வது அதிபராக பதவியேற்றுள்ள எனது அன்பு நண்பர் அதிபர் டொனால்டு டிரம்பிற்கு வாழ்த்துகள். இரு நாடுகளுக்கும் பயனளிக்கும் வகையிலும், உலகிற்கு சிறந்த எதிர்காலத்தை வடிவமைக்கும் வகையிலும் மீண்டும் ஒருமுறை நெருக்கமாக இணைந்து பணியாற்றுவதை நான் எதிர்நோக்குகிறேன். உங்கள் எதிர்காலம் வெற்றிகரமாக அமைய வாழ்த்துக்கள். "

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## மணிப்பூரில் துப்பாக்கிகள், வெடிகுண்டுகள் பறிமுதல்



இம்பால், ஜன.22

மணிப்பூர் மாநிலம் காங்கோக்பி மாவட்டத்தில் உள்ளது கெய்தல் மன்பி போலீஸ்நிலையம். இதன் எல்லைக்கு உட்பட்ட லங்கோங்ஜங் மலைத்தொடரில்போலீசார்பாதுகாப்பு படையினர் தேடுதல் வேட்டை நடத்தியபோது, ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டன.

7.62ஸ்னைபர்துப்பாக்கி, தோட்டாக்களுடன்9எம்.எம்.துப்பாக்கிகள்5, எஸ்.பி.பி.எல். துப்பாக்கிகள்2, கையெறி குண்டுகள்2, ஏராளமான வெடி பொருட்கள், கண்ணீர் புகை குண்டுகள் ஆகியவை கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## வள்ளலார் சர்வதேச மையம் கட்ட இடைக்கால தடை



புதுடெல்லி, ஜன.22

கடலூர்மாவட்டம் வடலூரில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் வள்ளலார் சர்வதேச மையம் அமைக்க தமிழக அரசு சார்பில் சமீபத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது.இதனிடையே, வள்ளலார் சர்வதேச மையம் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த நிலையில், சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர்.

வடலூரில் வள்ளலார் சர்வதேச மையம் அமைக்கும் கட்டுமானப் பணிகளுக்கு சென்னை ஐகோர்ட்டு அனுமதி அளித்து உத்தரவிட்டது. இந்நிலையில், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து சுப்ரீம் கோர்ட்டில் வினோத் ராகவேந்திரன் என்பவர் மேல்முறையீடு செய்தார். அவர் தொடர்ந்த மேல்முறையீட்டு மனுவில், ஆன்மீக மையத்தை வணிக மயமாக்க முடியாது. அது ஏழைகளின் முன்னேறத்துக்கான இடம். வள்ளலார் கோவிலில் சர்வதேச மையம் கட்டுவது வள்ளலாரின் விருப்பத்துக்கு எதிரானது என அதில் தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், இந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், வள்ளலார் சர்வதேச மையத்தை கட்டுவது சட்டவிரோதம் என்றும் வள்ளலார் விருப்பத்துக்கு எதிரானது எனவும் வாதிட்டார். இதனைப் பதிவு செய்துகொண்ட சுப்ரீம் கோர்ட்டு, வள்ளலார் சர்வதேச மையத்தின் புதிய கட்டுமானங்களுக்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டது. மேலும், இந்த வழக்கு விசாரணை முடியும் வரைதற்போதையே நிலையே தொடர வேண்டும் எனவும் தமிழக அரசுக்கு அறிவுறுத்தியது. மேலும், இது தொடர்பாக தமிழக அரசுக்கும் நோட்டீஸ் பிறப்பித்து, வழக்கை பிப்ரவரி 28ம் தேதிக்கு ஒத்திவைத்துள்ளது.

## பள்ளியில் வைத்தே... கையும் களவுமாக சிக்கிய பள்ளி முதல்வர், ஆசிரியை பணியிடை நீக்கம்

சித்தோர்கார்,, ஜன.22


ராஜஸ்தான்மாநிலத்தில்உள்ளஒருஅரசுப்பள்ளியில்பள்ளிமுதல்வரும், ஆசிரியையும் தகாத செயல்களில் ஈடுபட்ட வீடியோ இணையத்தில் வைரலானதையடுத்து அவர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

சித்தோர்கார் மாவட்டத்தில் உள்ள சலேரா கிராமத்தில் உள்ள அரசுப் பள்ளியில் தனது அலுவலகத்திற்குள் வைத்து பள்ளி முதல்வரும், ஆசிரியையும் அநாகரீகமான செயலில் ஈடுபடும் சிசிடிவி காட்சிகள் இணையதளத்தில்வெளியாகிவைரலானது.அந்தவீடியோவில்இருவரும் கட்டிப்பிடிப்பது, முத்தமிடுவது உள்ளிட்ட தகாத செயல்களில் ஈடுபடும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

இதையடுத்து பள்ளி முதல்வர் மற்றும் ஆசிரியை இருவரும் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் குறித்து மாவட்ட கல்வி அதிகாரி ராஜேந்திர சர்மா கூறும்போது, "முதற்கட்ட விசாரணை நடத்தப்பட்டுள்ளது. பள்ளி முதல்வர் மற்றும் ஆசிரியை இருவரும் பணியிடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பாக விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.

பள்ளி வளாகத்திற்குள் பள்ளி முதல்வரும், ஆசிரியையும் தகாத செயல்களில் ஈடுபட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## சமூக ஆர்வலர் படுகொலை: சட்டம்ஒழுங்கு சீரழிவின் உச்சம்: சீமான் கண்டனம்



சென்னை, ஜன.22

நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

புதுக்கோட்டை மாவட்டம், திருமயத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலரும், அமெச்சூர் கபடி கழகச் செயலாளருமான சகோதரர் ஜகபர் அலி கனிமவளக்கொள்ளையர்களால் படுகொலை செய்யப்பட்டுள்ளது வன்மையான கண்டனத்துக்குரியது. தி.மு.க. ஆட்சியில் சட்டம்ஒழுங்கு எந்த அளவிற்குச் சீரழிந்துள்ளது என்பதற்கு சகோதரர் ஜகபர்அலியின் படுகொலையே மற்றுமொரு சான்றாகும்.

தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற கடந்த நான்கு ஆண்டுகளில் கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை ஆகியவை நடைபெறாத நாட்களே இல்லை என்ற அளவிற்குச் சட்டம்ஒழுங்கு முற்றுமுழுதாக சீரழிந்துள்ளது. தி.மு.க. ஆட்சியில்தமிழ்நாடு கடன் வாங்குவதிலும்,

கள்ளச்சாராய விற்பனையிலும், கட்டுக்கடங்காத கஞ்சா புழக்கத்திலும், டாஸ்மாக் மது விற்பனையிலும் அதன் காரணமாக நிகழும் சாலை விபத்துகளிலும் தான் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாறிநிற்கிறது.

தி.மு.க. ஆட்சியில் பெண்கள் குழந்தைகள் முதல் அரசியல் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் ஏன் தமிழ்நாடு காவல்துறையினருக்கே பாதுகாப்பு இல்லாத கொடுஞ்சூழல் நிலவுவதுதான் பெருங்கொடுமை.

கடந்த 2023ம் ஆண்டு மணற்கொள்ளையை தடுக்க முயன்ற தூத்துக்குடி மாவட்டம், முறப்பநாடு – கோவில்பத்து கிராம நிர்வாக அலுவலர் லூர்து பிரான்சிஸ் அரசு அலுவலகத்திலேயே மணற்கொள்ளையர்களால் வெட்டிக் கொல்லப்பட்டது முதல், கடந்த ஆண்டு கனிமவளக்கொள்ளைக்கு எதிராக போராடிய திருநெல்வேலியைச் சேர்ந்த சமூக ஆர்வலர் அன்புத்தம்பி பெர்ட்டின் ராயன் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தப்பட்டதை தொடர்ந்து, தற்போது திருமயம் சமூக ஆர்வலர் ஜகபர் அலி கனிமவளக்கொள்ளையர்களால் வாகனம் ஏற்றி படுகொலை செய்யப்பட்டுள்ளது வரை அடுத்தடுத்து படுகொலைகள் நடைபெற்ற வண்ணமே உள்ளன.

சமூக அவலங்களுக்கு எதிராக சட்டப்போராட்டம் நடத்தும் சமூக ஆர்வலர்களுக்கே பாதுகாப்பு இல்லையென்றால் தி.மு.க. ஆட்சியில் சமானிய மக்களின் நிலை என்ன? கனிமவளக் கொள்ளைக்கு எதிராக போராடுபவர்களை அரசே கைது செய்வதும், கூலிப்படைகள் மூலமாக கொல்லப்படுவதும் தொடர்கதையாகிவிட்ட தி.மு.க. ஆட்சி மக்களுக்கானதா? அல்லது கனமவளக் கொள்ளையர்களுக்கானதா? அரசு அலுவலர் முதல் சமூக ஆர்வலர்கள் வரை உண்மையும் நேர்மையுமாக மக்களுக்கும் மண்ணிற்கும் போராடும் போராளிகள் கொல்லப்படுவது தான் திராவிட மாடலா? என்ற கேள்வி எழுகிறது.

ஆகவே, கனிமவளக்கொள்ளைக்கு எதிராகப் போராடிய சமூக ஆர்வலர் சகோதரர் ஜகபர் அலி மீது வாகனம் ஏற்றி படுகொலை செய்த குற்றவாளிகளையும், அதன் பின்னணியில் சதிபுரிந்த கனிமவளக்கொள்ளையர்கள் அனைவரையும் விரைந்து கைது செய்து சட்டப்படி கடும் தண்டனைப்பெற்றுத்தர வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பட்டுக்கோட்டை ஆண்கள் மேல்நிலைப் பள்ளி நூற்றாண்டு விழா பிப்ரவரி மாதம் நடைபெறும் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் மூத்த நிர்வாகி பட்டுக்கோட்டை ராஜேந்திரன் தகவல்



தஞ்சை, ஜன.22

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டையில் பட்டுக்கோட்டை அரசுஆண்கள்மேல்நிலைப்பள்ளி நூற்றாண்டு விழா தொடர்பான ஆலோசனை செய்யவும் மற்றும் காங்கிரஸ்கட்சியின்கிராமகமிட்டி அமைக்க ஏற்பாடு செய்யவும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் மூத்த நிர்வாகி மற்றும் தமிழக காங்கிரஸ் கட்சியின் மாணவர் அணி ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் R.யஸ்வந்த் சாகர் ஆகியோர் பட்டுக்கோட்டைக்கு வருகை தந்தனர். முன்னதாக காங்கிரஸ் கட்சியின் கிராம கமிட்டி கூட்டத்தில் பங்கு பெற்ற அவர்கள் அதனைத் தொடர்ந்து பட்டுக்கோட்டை அரசுஆண்கள்மேல்நிலைப்பள்ளி நூற்றாண்டு விழா நடத்துவது தொடர்பாக பட்டுக்கோட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்குச் சென்று அங்கு பள்ளியை ஆய்வு செய்து அதன் பின்பு பள்ளியின் தலைமை ஆசிரியர் உள்ளிட்டவர்களிடத்தில்நூற்றாண்டுவிழா தொடர்பான ஆலோசனையை மேற்கொண்டார். பின்னர் அவர் செய்தியாளர்களிடத்தில் பேசும் பொழுது முன்னாள் ஜனாதிபதி வெங்கட்ராமன் உள்ளிட்ட பல பிரபலங்கள்படித்தபட்டுக்கோட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தானும் படித்ததை மிகப் பெருமையாக கருதுகிறேன். அந்த வகையில் என்னுடைய வளர்ச்சிக்கு அடித்தளமாக விளங்கிய பட்டுக்கோட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் நூற்றாண்டுவிழாவைசீரும்சிறப்புமாக நடத்த வேண்டும் என்பதற்காக தமிழக முதல்வரின் கவனத்திற்கு எடுத்துச் சென்றும் இது தொடர்பாக பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி இடத்தில் பேசி அவர் ஒப்புதல் அளித்ததன் பேரில் பட்டுக்கோட்டை எம்எல்ஏ அண்ணா துரை மாவட்ட கல்வி அலுவலர் உள்ளிட்டவர்களிடத்தில் கலந்து ஆலோசித்ததைத் தொடர்ந்து இன்று பட்டுக்கோட்டை ஆண்கள் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் உள்ளிட்டவர்களிடத்தில் ஆலோசனையை மேற்கொண்டோம். அந்த வகையில் வருகின்ற பிப்ரவரி மாதம் மூன்றாவது வாரத்தில் ஏதேனும் ஒரு தேதியை தேர்வு செய்து பள்ளியின் நூற்றாண்டு விழா நடத்தப்படும் .

இந்த பள்ளியில் படித்து சுப்ரீம் கோர்ட் வழக்கறிஞராகவும், மற்றும் மத்திய மந்திரிக்கு இணையான இந்திய அரசின் நேரு யுவ கேந்திர அகில இந்திய துணைத் தலைவராகவும், மேலும் பல பதவிகளை வகித்ததற்கான நன்றி கடனாக, இந்த நூற்றாண்டு விழாவை கொண்டாடுவதோடு இந்த பள்ளிக்கு திருவள்ளுவரின் உருவச் சிலையை எனது சார்பில் வைக்கவிருக்கின்றேன்.

மேலும் பள்ளிக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தரவும் துணை நிற்பேன் என்றார்.

# அருணாசலேஸ்வரர் கோவிலுக்கு 3 கிலோ தங்க நகைகள் அணிந்து வந்த தொழிலதிபர்



திருவண்ணாமலை, ஜன.22

திருவண்ணாமலையில் உள்ள அருணாசலேஸ்வரர் கோவிலுக்கு சாமி தரிசனம் செய்ய தினமும் ஏராளமான பக்தர்கள் வருகின்றனர். இந்த நிலையில் விஜயவாடாவை சேர்ந்த தொழிலதிபர் சாம் பசிவ ராவ் என்பவர் சாமி தரிசனம் செய்ய கோவிலுக்கு வந்தார்.

இவர் துபாயில் ஓட்டல் நடத்தி வருவதாக கூறப்படுகிறது.

அப்போது அவர்கழுத்து மற்றும் கை நிறைய சுமார் 3 கிலோ எடை கொண்ட தங்க நகைகள் அணிந்தபடி வந்தார். கோவிலில் இருந்த பக்தர்கள் அவரை ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

# யு.ஜி.சி. விதிகளில் ஒரு வேடம், சாதிவாரி கணக்கெடுப்பில் இன்னொரு வேடமா? அன்புமணி கேள்வி



சென்னை, ஜன.22

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

துணை வேந்தர்கள் நியமனம் குறித்த பல்கலைக்கழக மானியக்குழுவின் (யு.ஜி.சி.)வரைவுவிதிகள்தொடர்பான விவகா ரத்தில் மாநில உரிமைகளை காக்கவேண்டும் என்பதற்காக பா.ஜ.க. ஆட்சி நடக்காத மாநிலங்களின் முதல்மந்திரிகளுக்கு முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். இது நல்ல முயற்சிதான். பா.ம.க.வும் அதைத்தான் வலியுறுத்தி வருகிறது. அதேவேளையில், சமூகநீதியை காப்பதற்காக சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்தும் விவகாரத்தில் தமிழக அரசின் உரிமைகளை அப்பட்டமாக தாரை வார்த்துக் கொண்டிருக்கிறாரே, அந்தவிவகாரத்தில்மாநில அரசின் உரிமைகளை எவ்வாறு காப்பது என்பது குறித்து இதுவரை சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தி முடித்துள்ள பீகார், கர்நாடகம், தெலுங்கானா உள்ளிட்ட மாநிலங்களின் முதல்மந்திரிகளுக்கு கடிதம் எழுதியாவது கேட்டறிவாரா முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்? மாநில உரிமைகளை காப்பதில் யு.ஜி.சி. விதிகளில் ஒரு வேடம், சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பில்இன்னொருவேடமா? எப்போது கலையும் இந்த இரட்டை வேடம்?

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# தமிழகம் ரூ.10 லட்சம் கோடி கடனில் உள்ளது அண்ணாமலை



நாமக்கல், ஜன.22

தமிழக பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

தமிழக அரசு ரூ.10 லட்சம் கோடி கடனில் இருக்கிறது. இதைகட்டி முடிக்க இன்னும்பல ஆண்டுகளாகும். தி.மு.க. தமிழகத்தில் அடிப்படை தேவைகளுக்கு செலவு செய்வதில்லை. தேவையில்லாதவைகளுக்கு அள்ளித்தெளித்துக் கொண்டிருக்கிறது. நான் தமிழகத்திற்கு வந்திருப்பது அரசியலை தூய்மை செய்வதற்காக. ரூ.3 லட்சம் கோடி பட்ஜெட் போடுகிறார்கள் என்றால், ரூ.60 ஆயிரம், ரூ.70 ஆயிரம் கோடிகள் எதற்காக செலவு செய்கிறார்கள்? என்பதே தெரியவில்லை. மக்கள் நலனுக்காக இலவசங்கள் வழங்கினால் ஏற்றுக் கொள்வோம். வாக்கு அரசியலுக்காக வழங்கினால் அதனை கடுமையாக எதிர்ப்போம். தமிழகத்தில் திராவிட ஆட்சியால் தான் அருந்ததிய மக்கள் மருத்துவ படிப்பிற்கு அதிக அளவில் சேர முடிகிறது என அமைச்சர் மதிவேந்தன் கூறி உள்ளார். சுதந்திரம் பெற்று எத்தனை ஆண்டுகள் ஆகிறது? தி.மு.க. 5 முறை ஆட்சியில் இருந்தது. தற்போது 6வது முறையாக ஆட்சியில் இருந்து வருகிறது. இன்றைக்கும் பட்டியல் சமுதாய மாணவர்கள் கல்வியில் பின்தங்கியுள்ளனர். 75 ஆண்டுகளாக அரசியலில் இருக்கும் தி.மு.க. பட்டியல் சமுதாய மாணவர்களை உயர்த்துவதற்கு என்ன செய்து உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஆற்றங்கரையில் இருந்த கட்டிடம் இடிந்து விழுந்து விபத்து



கோவை, ஜன.22

கோவை சங்கனூரில் ஆற்றங்கரை அருகே இருந்த கட்டிடம் சரிந்து விழுந்து விபத்து ஏற்பட்டுள்ளது.

நீர் ஓடையை தூர்வாரும் பணி மேற்கொள்ள இருப்பதால் கரையோர மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

முன்கூட்டியே குடியிருப்பு வாசிகள் வெளியேற்றப்பட்டதால் உயிர் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

கட்டிடம்சரிந்துவிழுந்து விபத்து ஏற்பட்ட சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

# தி.மு.க. ஆட்சியில் கொலைகள் நடப்பது சர்வசாதாரணமாகி விட்டது பிரேமலதா குற்றச்சாட்டு

சென்னை, ஜன.22

தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

அ.தி.மு.க. முன்னாள் கவுன்சிலரும் சட்டவிரோத கல் குவாரிக்கு எதிராக வழக்குத் தொடர்ந்து போராடியவருமான ஜெகபர் அலி இருசக்கர வாகனத்தில் சென்றபோது லாரி மோதிய விபத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். தொடர்ந்து கனிம வள கொள்ளை நடப்பதாக மாவட்ட நிர்வாகத்திற்கு ஆதாரங்களுடன் பல முறை மனு கொடுத்து வந்துள்ளார்.

இதன் காரணமாக கனிம வள கொள்ளையர்களால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வந்தார். இந்த விசாரணையில் ஜெகபர் அலி விபத்து ஏற்படுத்தி கொலை செய்யப்பட்டது தெரிய வந்ததால் குவாரி உரிமையாளர் உட்பட 4 பேரை திருமயம் போலீசார் கைது செய்துள்ளனர். தொடர்ந்து தி.மு.க. ஆட்சியில் இது போன்ற கொலைகள்நடப்பது சர்வ சாதாரணமாக விட்டது. சமூக ஆர்வலராக ஒருவர் கனிமவள கொள்ளை நடப்பதை எதிர்த்து வழக்கு பதிவு செய்யாததால் அவர் திட்டமிட்டு லாரி ஏற்றி கொலை செய்த உண்மை நிலை விசாரணையில் வெளியே வந்துள்ளது.

இது மிகவும் கண்டனத்திற்குரியது.

இந்த வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்றி விசாரணை செய்ய வேண்டும். உண்மைக்காக குரல் கொடுத்த ஒருவரை கொலை செய்தது எந்த விதத்தில் நியாயம்? இது தான்திராவிட மாடல் ஆட்சியா என்ற மக்களின் கேள்விக்கு இந்த அரசு பதில் தர வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# பரந்தூர் விவகாரத்தில் நாடகமாடுகிறது தி.மு.க. விஜய் விமர்சனம்

பரந்தூர், ஜன.22

பரந்தூர் பசுமை வெளி விமான நிலையம் அமைக்கும் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் கிராம மக்களையும் போராட்ட குழுவினரையும் சந்தித்து ஆதரவு தெரிவித்து தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் பேசியதாவது:

★ நான் ஊருக்கும் வருவதற்கும், நமது த.வெ.க.வினர் நோட்டீஸ் கொடுப்பதற்கும் தடை விதிக்கப்படுவது ஏன் என தெரியவில்லை. ★ உங்களின் வசதிக்காக மக்களோடு இருப்பதை போன்று நம்பும் வகையில் நீங்கள் நடத்தும் நாடகத்தை பார்த்துக்கொண்டு மக்கள் சும்மா இருக்க மாட்டார்கள்.

★ நாடகம் ஆடுவதில் கில்லாடிகள் தி.மு.க.வினர்.

★ மத்திய, மாநில அரசுகள் நடத்தும் நாடகத்தை மக்கள் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க மாட்டார்கள். ★ விமான நிலையத்திற்கு வேறு இடத்தை ஆய்வு செய்ய வேண்டும்.

★ விவசாய நிலம் இல்லாத இடத்தில் விமான நிலையத்தை கொண்டு வாருங்கள் என்று மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்துகிறேன்.

★ நான் வளர்ச்சிக்கு எதிரானவன் இல்லை.

★ ஏர்போர்ட் கட்ட வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆனால், இங்க வேணாம்னுதான் சொல்கிறேன்.

★ அரிட்டாபட்டியில் டங்ஸ்டன் சுரங்கம் வேண்டாம் என முடிவெடுத்த தமிழக அரசு பரந்தூர் விமான நிலையம் வேண்டாமென ஏன் சொல்லவில்லை.

★ பரந்தூர் திட்டத்தால் ஆட்சியாளர்களுக்குஏதோ லாபம் இருப்பதாக அவர் கூறினார்.

20 ஜனவரி 2025 1:08 PM

நான்மாநில வளர்ச்சிக்கு எதிரானவன் அல்ல.

உங்களுக்காக சட்டத்திற்கு உட்பட்ட எல்லா வழிகளிலும் நானும், த.வெ.க.வினரும் உறுதுணையாக இருப்போம்.

பரந்தூர் பசுமை வெளி விமான நிலையம் அமைக்கும் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் கிராம மக்களையும் போராட்ட குழுவினரையும் சந்தித்து ஆதரவு தெரிவித்து தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் பேசியதாவது:

★ பரந்தூர் கிராமத்திலிருந்து தனது கள அரசியல் பயணத்தை தொடங்குகிறேன்.

★ வீட்டிற்கு பெரியவர்களை போல் நாட்டிற்கு மிக முக்கியமானவர்கள் விவசாயிகள்.

★ நான் மாநில வளர்ச்சிக்கு எதிரானவன் அல்ல. வேறு இடத்தில் விமான நிலையம்அமைக்கவேண்டும்.

★ உங்களுக்காக சட்டத்திற்கு உட்பட்ட எல்லா வழிகளிலும் நானும், த.வெ.க.வினரும் உறுதுணையாக இருப்போம்.

★ வளர்ச்சி என்ற பெயரில் ஏற்படும் அழிவு மக்களை அதிகம் பாதிக்கும். பரந்தூர் விமான நிலையத்துக்கான இடத்தை மறு ஆய்வு செய்ய வேண்டும்.

★ Confident ஆக இருங்கள், வெற்றி நிச்சயம் என்று அவர் பேசினார்.

# சிறுமி இறந்ததால் மூடப்பட்ட பள்ளி 16 நாட்களுக்கு பின்பு திறப்பு முற்றுகையிட்ட பெற்றோர்கள்



விக்கிரவாண்டி, ஜன.22

விக்கிரவாண்டியிலுள்ள செயின்ட் மேரீஸ் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளியில் எல்.கே.ஜி. படித்த அதே ஊரைச்சேர்ந்த பழனிவேலுவின் மகள் லியா லட்சுமி(4) என்ற சிறுமி கடந்த 3ந் தேதி பள்ளி வளாகத்திலுள்ள செப்டிக் டேங்கில் விழுந்து இறந்தது. இதையடுத்து பெற்றோர்கள், உறவினர்கள்பள்ளி முன்பு திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டதால் பள்ளி விடுமுறை விடப்பட்டு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது.

இந்த சம்பவத்தில் பள்ளி தாளாளர் எமில்டா, பள்ளி முதல்வர் டோமினிக் மேரி, ஆசிரியை ஏஞ்சல் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். பின்னர் சென்னை உயர்நீதி மன்ற உத்திரவுபடி நிபந்தனை ஜாமீனில் வெளிவந்துள்ளனர்.

பள்ளியில் குழந்தைகளுக்கு தேவையான பாதுகாப்பு உள்ளதா என கடந்த 7ந் தேதி பள்ளியில் அதிகாரிகள் ஆய்வு செய்தனர். மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளிகளிலும் அரையாண்டு தேர்வு முடிந்த நிலையில் இப்பள்ளியில் அரையாண்டு தேர்வு நடைபெறாமல் விடுமுறையால் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று மாலை பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கும் செல்போன்களில் குறுந்தகவல், பள்ளிநிர்வாகத்தின் சார்பில் இன்று முதல் பள்ளி திறக்கப்படும் எனவும், அனைவரும் முழு யூனிபார்ம்வுடன் பள்ளிக்கு 9 மணிக்கு வரவேண்டும் எனவும், இன்று சிறப்பு வகுப்புகள் ஏதும் கிடையாது என அறிவிப்பு அனுப்பினர். மாணவி இறந்த சம்பவம் நடந்து 16 நாட்களுக்கு பிறகு பலத்த போலீஸ் பாதுகாப்புடன் பள்ளி மீண்டும் இன்று திறக்கப்பட்டது.

பள்ளி மாணவர்களை பெற்றோர்கள் அழைத்து வந்து பள்ளியில் விட்டு சென்றனர்.

9 மணிக்கு பிரேயர் தொடங்கிய நிலையில் இறந்த சிறுமியின் பெற்றோர்கள் மற்றும் பள்ளியில் படிக்கும் மாணவமாணவிகளின் பெற்றோர்கள் சுமார் 50 பேர் பள்ளியை முன்பு முற்றுகையிட்டு எங்கள் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லை.

பள்ளி நிர்வாகம் பள்ளியில் உள்ள குறைபாடுகளை சரி செய்து விட்டோம் என்றும் இனி நாங்கள் குழந்தைகளுக்கு பாதுகாப்பாக வைத்திருப்போம்என்றோ உறுதி அளிக்கவில்லை. திடீரென நேற்று செல்போன் மூலம் குறுஞ்செய்தி அனுப்பி விட்டு இன்று பள்ளி திறக்கப்படுகின்றது. பள்ளி நிர்வாகம் முறையாக பெற்றோர்களுக்கு ஆலோசனைக் கூட்டம் போட்டு தன்னிலை விளக்கம் அளிக்க வேண்டும். என்று கூறி பள்ளியின்முன்பு முற்றுகையிட்டனர்.

# பரந்தூர் விமான நிலையம் போராட்ட குழுவினரை விஜய் சந்திப்பது தனிப்பட்ட உரிமை வைகோ



திண்டுக்கல், ஜன.22

தேர்தல் வழக்கு தொடர்பாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ இன்று திண்டுக்கல் நீதிமன்றத்தில் நேரில் ஆஜரானார்.

2016ம் ஆண்டு நடந்த சட்டமன்ற தேர்தலின் போது மக்கள் நலக்கூட்டணி சார்பில், திண்டுக்கல்லில் பிப்ரவரி 22ம் தேதி ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ பிரசார பொதுக் கூட்டத்தில் பேசினார். அப்போது தேர்தல் விதிமுறைகளை மீறி இரவு 10 மணிக்கு மேல் தேர்தல் பிரசாரம் மேற்கொண்டதாக திண்டுக்கல் நகர் வடக்கு போலீசார் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, மாவட்ட செயலாளர் செல்வராகவன், நகரசெயலாளர்செல்வேந்திரன் மற்றும் கூட்டணிக்கட்சியினர் 12 பேர் மீது வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கு திண்டுக்கல் ஜே.எம்.1ல் நடைபெற்று வந்தது.

இந்த வழக்கை தள்ளுபடிசெய்யக்கோரிவைகோ தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல்செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி, இந்த வழக்கை 4 மாதங்களுக்குள் சம்பந்தப்பட்ட நீதி மன்றத்தில் விசாரித்து முடிக்க உத்தரவிட்டார். இதையடுத்து திண்டுக்கல் நீதிமன்றத்தில் வழக்கு இன்று விசாரணைக்கு வந்தது.

திண்டுக்கல் ஜே.எம்., 1 நீதிமன்றத்தில் மாஜிஸ்திரேட் சவுமியா மேத்யூ முன்னிலையில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, திண்டுக்கல் மாவட்டச்செயலாளர் செல்வராகவன், நகர செயலாளர் செல்வேந்திரன், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் மைதீன்பாவா, மாநில துணை செயலாளர் திருச்சித்தன் உள்ளிட்ட 12 பேர் நேரில் ஆஜராகினர். வழக்கு விசாரணையை பிப்.5ம் தேதிக்கு மீண்டும் ஒத்தி வைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

அதன் பின்னர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் வைகோ கூறியதாவது,

இந்தியாவில் மோடி ஆட்சியில் சர்வாதிகாரம் மட்டுமே ஓங்கி வருகிறது. அரசியல் அமைப்பு சட்டத்தை அவர்கள் மதிப்பதே இல்லை. ஒரேநாடு, ஒரேதேர்தல், ஒரேகொடி என மாற்ற முயற்சி எடுத்து வருகின்றனர். வாரணாசியில் நடந்த ஆர்.எஸ்.எஸ். பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நாடு முழுவதும் நிறைவேற்ற மோடி அரசு முனைப்பு காட்டி வருகிறது. அம்பேத்கரின் அரசியல் அமைப்பு சட்டத்தையே மாற்றி அமைக்க நினைப்பது கண்டிக்கத்தக்கதாகும்.

மத்திய அரசு பா.ஜ.க. ஆளாத மாநிலங்களில் நிதி ஒதுக்குவதில் பாரபட்சம் காட்டுகிறது. அந்த வகையில் தமிழகத்திற்கு வழங்கப்பட வேண்டிய நிதி தொடர்ந்து மறுக்கப்படுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் பல வளர்ச்சி பணிகள் பாதிக்கப்படும் நிலை உள்ளது. ஆனால் இதனையும் கடந்து திராவிட மாடல் ஆட்சி மக்களுக்கான ஆட்சியாக விளங்கி வருகிறது. வருகிற தேர்தலிலும் இந்த கூட்டணி மகத்தான வெற்றி பெறும்.

பரந்தூர் விமான நிலையத்திற்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தி வரும் நிலையில் அவர்களுக்கு பல்வேறு தரப்பினரும், அரசியல் கட்சியினரும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில் நடிகர் விஜயும் அவர்களை சந்தித்து பேசுகிறார். இது அவரின் தனிப்பட்ட உரிமை.

இவ்வாறு அவர் கூறினார்.

இதனை தொடர்ந்து திண்டுக்கல் சீலப்பாடி, தோமையார்புரம் ஆகிய பகுதிகளில் ம.தி.மு.க. கட்சி கொடியை வைகோ ஏற்றி வைத்தார்.

# நெல்லை தனியார் பணிமனையில் திடீர் தீ விபத்து: 2 பஸ்கள் எரிந்து நாசம்



நெல்லை, ஜன.22

நெல்லையை அடுத்த தச்சநல்லூரில் தனியார் பஸ் நிறுவனம் உள்ளது. இந்த நிறுவனத்திற்கு சொந்தமாக புறநகர் பஸ்கள், மினி பஸ்கள் என சுமார் 50க்கும் மேற்பட்ட பஸ்கள் மாநகரிலும், நெல்லை மாவட்டத்திலும் இயங்கி வருகிறது.

இந்த பஸ்களுக்கான பராமரிப்பு மேற்கொள்ளும் பணிமனை தச்சநல்லூர் பகுதியில் உள்ளது.

இதில் நேற்று இரவு சுமார் 20க்கும் மேற்பட்ட பஸ்கள் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. அப்போது பழுதாகி நின்ற பஸ்களை சரி செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இன்று அதிகாலை 1 மணி அளவில் பழுது பார்க்கும் பணியில் ஊழியர்கள் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது பணிமனையில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு பஸ்சில் திடீரென தீப் பிடித்தது. இதைத்தொடர்ந்து கண்ணிமைக்கும் நேரத்தில் தீ மளமளவென பற்றி எரிந்தது. தொடர்ந்து அருகில் மற்றொரு பஸ்சிலும் தீ பரவி எரிய தொடங்கியது. இதனால் அதிர்ச்சி அடைந்த ஊழியர்கள் தண்ணீரை ஊற்றி தீயை அணைக்க முயன்றனர். ஆனால் காற்று வேகம் காரணமாக தீ வேகமாக பரவியது.

உடனடியாக பாளை தீயணைப்பு படை நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்பு படை வீரர்கள் 2 பஸ்சிலும் பற்றி எரிந்த தீயை தண்ணீரை பீய்ச்சி அடித்து அணைத்தனர். ஆனாலும் ஒரு பஸ் முற்றிலும் எரிந்தது. மற்றொரு பஸ் பாதி எரிந்தது.

இதுகுறித்து தச்சநல்லூர் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து தீ பற்றியது எப்படி என்பது குறித்து விசாரித்தனர். மின் கசிவால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதா? அல்லது வெல்டிங் எந்திரத்தினை பயன்படுத்தி பணி செய்த போது, தீப்பொறி பரவியிருக்கலாமா? என்ற கோணத்தில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் செந்தில் முருகன் போட்டியில் இருந்து விலகல்



முன்னாள் நிர்வாகி செந்தில் முருகன் விலகி உள்ளார்.

ஈரோடு, ஜன.22

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5ந்தேதி நடைபெறுகிறது.

இந்த இடைத்தேர்தலில் அ.தி.மு.க. போட்டியிடாது என அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்து இருந்தார்.

ஆனால் ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக அ.தி.மு.க. நிர்வாகி செந்தில் முருகன் போட்டியிட இருந்தார்.

இதைத்தொடர்ந்து செந்தில் முருகனை கட்சியில் இருந்து நீக்கி அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு வெளியிட்டார். தலைமை எடுத்த முடிவுக்கு மாறாக தேர்தலில் போட்டியிட முடிவு செய்ததால் கட்சியில் இருந்து செந்தில் முருகன் நீக்கம் செய்யப்படுவதாக தெரிவித்து இருந்தார்.

இந்நிலையில் வேட்புமனுக்கள் வாபஸ் பெற இன்று கடைசி நாள் என்ற நிலையில், ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் இருந்து அ.தி.மு.க.

# ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 2 ஆயிரம் கனஅடியாக அதிகரிப்பு



ஒகேனக்கல், ஜன.22

கர்நாடகா காவிரி கரை ஓரங்களில் பெய்த மழையின் காரணமாக ஒகேனக்களுக்கு நீர்வரத்து கடந்த ஒரு வாரமாக குறை வதும் அதிகரிப்பதுமாக இருந்து வருகிறது.

இந்த நிலையில் நேற்று ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 1500 கனஅடி தண்ணீர் வந்தது. இதையடுத்து காவிரி நீர்பிடிப்பு பகுதியில் கனமழை பெய்தது.

இதனால் இன்று காலை 8 மணி நிலவரப்படி நீர்வரத்து 2 ஆயிரம் கன அடியாக அதிகரித்து வந்தது.

மெயின் அருவி, ஐந்தருவி, சினிபால்ஸ் உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது.

சுற்றுலாப் பயணிகள் குடும்பத்துடன் பரிசல் பயணம் மேற்கொண்டு காவிரி ஆற்றின் அழகை ரசித்தனர். மேலும் தொங்கு பாலத்தில் நின்று காவிரி ஆற்றில் பாறைகளுக்கு நடுவே விழும் தண்ணீரை ஆர்வமுடன் ரசித்து மகிழ்ந்தனர்.

பின்னர் அவர்கள் மெயின் அருவியில் குளித்தும், பெண்கள் காவிரி ஆற்றில் குளித்தும் மகிழ்ந்தனர்.

காவிரி ஆற்றில் நீர்வரத்தை தமிழககர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

*20ஜனவரி 2025 9:09 AM (Updated: 20 ஜனவரி 2025 10:26 AM)*

நமது குடியரசு தினவிழா கொண்டாட்டம் வருகிற 26ம் தேதி கொண்டாடப்பட உள்ளது.

முப்படை வீரர்கள், பள்ளி, கல்லூரி மாணாக்கர்களின் அணிவகுப்பு மற்றும் கலை நிகழ்ச்சிக்கான ஒத்திகை நடைபெறுகிறது.

நமது குடியரசு தினவிழா கொண்டாட்டம் வருகிற 26ம் தேதி காமராஜர் சாலையில் உழைப்பாளர் சிலை அருகில் கொண்டாடப்படவிருக்கிறது.

இதனை முன்னிட்டு ஜனவரி 26 மற்றும் ஒத்திகை காரணமாக 22 மற்றும் 24 ஆம் தேதிகளில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் சென்னை மெரினா கடற்கரை காமராஜர் சாலையில் குடியரசு தின அணிவகுப்பு ஒத்திகை நடைபெறுகிறது. முப்படை வீரர்கள், பள்ளி, கல்லூரி மாணாக்கர்களின் அணிவகுப்பு மற்றும் கலை நிகழ்ச்சிக்கான ஒத்திகை நடைபெறுகிறது.

# காதல் திருமணம் செய்த இளம்பெண் தற்கொலை திண்டுக்கல்லில் சோகம்



திண்டுக்கல், ஜன.22

திண்டுக்கல்லை அடுத்த கொட்டப்பட்டி ஜெயந்தி காலனியை சேர்ந்தவர் ஜெயபாலன். இவருடைய மனைவி ஜெனிபர் (வயது 22). இவர்கள் 2 பேரும் தனியார்கல்லூரியில் படித்தபோது காதலித்து வந்தனர். கடந்த 8 மாதங்களுக்கு முன்பு அவர்கள் திருமணம் செய்துகொண்டனர்.

இந்தநிலையில் கடந்த சில நாட்களாக குடும்ப பிரச்சினை காரணமாக ஜெயபாலனுக்கும், ஜெனிபருக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்ததாக கூறப்படுகிறது. இதனால் மனமுடைந்த நிலையில் காணப்பட்ட ஜெனிபர் நேற்று முன்தினம் வீட்டில் யாரும் இல்லாத போது தூக்குப்போட்டு தற்கொலைக்கு முயன்றார். இதனை பார்த்த அக்கம் பக்கத்தினர் அவரை மீட்டு சிகிச்சைக்காகதிண்டுக்கல் அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். ஆனால் அங்கு அவரை பரிசோதனை செய்த டாக்டர்கள், ஜெனிபர் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர். இது குறித்து திண்டுக்கல் தாலுகா போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணவேணி வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார். மேலும் ஜெனிபருக்கு திருமணமாகி 8 மாதங்களே ஆவதால் திண்டுக்கல் ஆர்.டி.ஓ. சக்திவேல் மேல் விசாரணை நடத்தி வருகிறார்.

# எல்லைப் பாதுகாப்புப் படை கூடுதல் டிஜிபியாக மகேஷ்குமார் அகர்வால் நியமனம்



சென்னை, ஜன.23

தமிழகக் காவல்துறையின் ஆயுதப்படை டி.ஜி.பி.யாக பணியாற்றி வந்த மகேஷ்குமார் அகர்வால் மத்திய அரசுப் பணிக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளார். தமிழக அரசின் சார்பில் அவ்வப்போது பல்வேறு நிர்வாக காரணங்களுக்காக ஐஏஎஸ் மற்றும் ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டு வருகின்றனர். அதோடு ஐஏஎஸ் மற்றும் ஐபிஎஸ் அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு மற்றும் கூடுதல் பொறுப்புகளும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் மத்திய அரசுப் பணிக்கும் பணியிட மாற்றம் செய்யப்பட்டு வருகின்றனர்.

அந்த வகையில் தமிழகக் காவல்துறையின் ஆயுதப்படை டி.ஜி.பி.யாக பணியாற்றி வந்த மகேஷ்குமார் அகர்வால் எல்லைப் பாதுகாப்புப் படை கூடுதல் டிஜிபியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கூடுதல் டிஜிபியாக 4 ஆண்டுகள் பதவி வகிப்பார் என்று தகவல் வெளியாகி உள்ளது. போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவு ஏடிஜிபியாக பணியாற்றிய இவர். கள்ளக்குறிச்சி விஷ சாராய சம்பவத்தில் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டு ஆயுதப்படை ஏடிஜிபியானார் என்பது குறிப்பிடத்தக்கது.

பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த மகேஷ்குமார் அகர்வால் 1972 ஆம் ஆண்டு பிறந்தவர். தமது தந்தையைப் போலவே சட்டம் படித்துவிட்டு, காவல் துறை பணியில் சேர்ந்தார். 1994 ம் ஆண்டு தனது 22 வயதில் சிவில் சர்வீஸ் தேர்வில் தேர்ச்சி பெற்று தமிழ்நாடு கேடர் ஐபிஎஸ் அதிகாரியாக பணியில் சேர்ந்தார். தமிழ்நாட்டில் தேனி எஸ்.பியாகவும், தூத்துக்குடி மாவட்ட எஸ்.பியாகவும் பணியாற்றினார். 2001 ம் ஆண்டு சென்னை பூக்கடை துணை கமிஷனர்,

போக்குவரத்து துணை கமிஷனர் பதவிகளை வகித்தார். அதைத் தொடர்ந்து, சிபிஐ அதிகாரியாக 10 ஆண்டுகள் பணியாற்றி உள்ளார்.

# மூதாட்டியை பாலியல் வன்கொடுமை செய்ய முயன்ற வாலிபருக்கு போலீஸ் வலைவீச்சு

சென்னை, ஜன.22

சென்னை புளியந்தோப்பு பகுதியைச் சேர்ந்த 60 வயது மூதாட்டி மாதவரத்தில் உள்ள தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறார். தனியாக வசித்து வரும் அவர், கடந்த 17ந் தேதி இரவு வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தார். அப்போது அதே பகுதியைச் சேர்ந்த 22 வயது வாலிபர் ஒருவர், வீடு புகுந்து மூதாட்டியை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த மூதாட்டி சத்தம் போடவே அங்கிருந்து வாலிபர் தப்பிச் சென்றுவிட்டார். இது குறித்த புகாரின்பேரில் புளியந்தோப்பு அனைத்து மகளிர் போலீசார் வழக்குப்பதிவு செய்து தப்பி ஓடிய வாலிபரை வலை வீசி தேடி வருகின்றனர்.

# பள்ளி மாணவிகளுக்கு பாலியல் தொல்லை: போக்சோவில் ஆசிரியர் கைது

திருச்சி, ஜன.22

திருச்சி மாவட்டத்தில் உள்ள அரசு உதவி பெறும் ஒரு பள்ளியில் 8ம் வகுப்பு படிக்கும் 2 மாணவிகளிடம் அதே பள்ளியில் ஆசிரியராக பணிபுரியும் அய்யப்பன் (வயது 52) என்பவர் பாலியல் ரீதியாக தொல்லை கொடுத்ததாக கூறப்படுகிறது. இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த மாவட்ட குழந்தைகள் நல அதிகாரிகள் மற்றும் ஜீயபுரம் போலீசார் விசாரணை நடத்தினர்.

இதில், மாணவிகளுக்கு அய்யப்பன் பாலியல் தொல்லை கொடுத்தது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து, குழந்தைகள் நல ஆலோசனை அதிகாரி அளித்த புகாரின்பேரில் போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து ஆசிரியர் அய்யப்பனை கைது செய்தனர்.

# டாஸ்மாக்கில் மும்மொழியில் அறிவிப்பு பலகை? தமிழக அரசு விளக்கம்




சென்னை, ஜன.22

தமிழகத்தில் மும்மொழி கொள்கைக்கு கடுமையான எதிர்ப்பு நிலவி வருகிறது. இந்த சூழலில் டாஸ்மாக் மதுபான கடைக்கான அறிவிப்பு பலகை மும்மொழியில் வைக்கப்பட்டுள்ளதாக சமூக வலைதளங்களில் ஒரு புகைப்படம் வேகமாக பகிரப்பட்டு வருகிறது. அதில் 'ஒருவழியாக தமிழகம் மும்மொழி கொள்கையை டாஸ்மாக்கில் அறிமுகம் செய்துள்ளதாக' கூறப்பட்டுள்ளது. இதற்கு தமிழக அரசின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக கணக்கான தகவல் சரிபார்ப்பகம் விளக்கம் அளித்துள்ளது. இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "இது பழைய புகைப்படம் மற்றும் அகற்றப்பட்டது. நாமக்கல் மாவட்டம் முதலைப்பட்டி அருகே உள்ள டாஸ்மாக் கடையில் கடந்த ஆண்டு புதிதாக மதுக்கூடம் (பார்) ஆரம்பிக்கப்பட்ட சமயத்தில் அந்த பலகை 'பார்' உரிமதாரரால் வைக்கப்பட்டது. இதுகுறித்து தெரியவந்ததும் நடவடிக்கை மேற்கொண்டு பலகை அகற்றப்பட்டது. தற்போது எந்த 'போர்டும்' அந்த இடத்தில் இல்லை. பழைய புகைப்படம் தற்போது வலைதளங்களில் பரவி வருகிறது" என்று கூறப்பட்டுள்ளது.

# தருமபுரி அருகே நாட்டு வெடிகள் வெடித்து 6 வயது சிறுமி பலி: 2 பேர் கைது



காரிமங்கலம், ஜன.22

தருமபுரி மாவட்டம், ஆட்டுக்காரன்பட்டி கிராமத்தை சேர்ந்தவர் அபி (வயது28). இவருடைய மனைவி நாகவேணி (25). இவர்களுக்கு கவிநிலா (6) என்ற மகள் இருந்தாள். கணவன்மனைவி இருவரும் பெங்களூருவில் உள்ள ஒரு நிறுவனத்தில் கூலி வேலை செய்து வந்தனர்.

காரிமங்கலம் அருகே உள்ள பூமாண்டஅள்ளி கிராமத்தில் வசிக்கும் வள்ளி என்ற பெண்ணும், நாகவேணியுடன் பெங்களூருவில் வேலைபார்த்து வந்துள்ளார். அவர்கள் இருவரும் தோழிகளாக பழகி வந்துள்ளனர்.

இந்த நிலையில் பொங்கல் பண்டிகையை கொண்டாட வள்ளி தனது சொந்த கிராமமான பூமாண்டஅள்ளிக்கு சிறுமி கவிநிலாவை மட்டும் அவரது பெற்றோர் அனுமதியுடன் அழைத்து வந்துள்ளார். வள்ளியின் பக்கத்து வீட்டில் தர்மன் என்பவர் வசித்து வருகிறார்.

நேற்று மதியம் சிறுமி கவிநிலா வள்ளியிடம் கூறிவிட்டு தர்மன் வீட்டின் மொட்டை மாடிக்கு விளையாட சென்றாள். அந்த மொட்டை மாடியில் சிறிய அறை ஒன்று உள்ளது.

அந்த அறையில் நாட்டு வெடிகள் (கயிற்றால் சுற்றப்பட்ட குண்டு வெடிகள்) அங்கு வைத்திருந்தனர். இதனிடையே அந்த அறையில் இருந்த வெடிகள் திடீரென வெடித்து சிதறின. இதில் எதிர்பாராத விதமாக அந்த அறையின் ஒரு பக்க சுவர் கீழே இடிந்து விழுந்துள்ளது. மேலும் அந்த அறையும் இடிந்து சேதம் அடைந்தது.

அதே நேரத்தில் மொட்டை மாடியில் விளையாடிக்கொண்டிருந்த அந்த சிறுமி கவிநிலாவும் தூக்கி வீசப்பட்டு உடல் துண்டு, துண்டாகி கருகிய நிலையில் பரிதாபமாக இறந்தாள்.

இதுகுறித்து தகவல் அறிந்த காரிமங்கலம் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரித்தனர். மேலும் விபத்துக்கானகாரணத்தை கண்டறிய தடயங்களையும் சேகரித்தனர். பின்னர் அவர்கள் சிறுமியின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக தருமபுரி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

சிறுமி உயிரிழந்த செய்தி பெங்களூருவில் வசித்து வரும் அவரது பெற்றோர் மற்றும் உறவினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. இதனை கேட்டு அவர்கள் கடும் அதிர்ச்சி அடைந்தனர். அவர்கள் உடனே விரைந்து வந்து தனது மகள் உடலை பார்த்து கதறி அழுதனர்.

இந்த வெடி விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தியதில் பன்றிகளை வேட்டையாட வெடி மருந்துகளை வாங்கிக் கொண்டு தர்மன், அவரது மருமகன் கிருஷ்ணன் ஆகிய 2 பேர் அனுமதியின்றி சட்ட விரோதமாக நாட்டு வெடிகள் தயாரித்துள்ளனர்.

இதனால் தயாரித்த வெடிகளை காய வைத்து மொட்டை மாடியில் அறை யில் வைத்துள்ள போது எதிர்பாராதவிதமாக வெடி த்ததில் சிறுமி பலியாகி யுள்ளது தெரிய வந்தது.

இது தொடர்பாக போலீசார் வழக்குபதிவு செய்து வீட்டின் உரிமையாளர் தர்மன், அவரது மருமகன் கிருஷ்ணன் ஆகிய 2 பேரை கைது செய்தனர். மேலும் வெடிக்காத நாட்டு வெடிகளை பறிமுதல் செய்தனர்.

# சொந்த ஊர்களில் இருந்து திருப்பூர் திரும்பிய தொழிலாளர்கள்: பஸ் ரெயில் நிலையங்களில் கூட்டம் அலைமோதல்



திருப்பூர், ஜன.22

பனியன் தொழில் நகரமான திருப்பூரில் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இருந்தும், வெளி மாநிலங்களில் இருந்தும் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். ஆண்டுதோறும் தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகையின்போது தொழிலாளர்கள் குடும்பத்துடன் சொந்த ஊர்களுக்கு செல்வது வழக்கம். பொங்கல் பண்டிகையை யொட்டி பனியன் நிறுவனங்களுக்கு 8 நாட்கள் விடுமுறை அளிக்கப்பட்டது.


இதையடுத்து திருப்பூரில் தங்கி பணியாற்றி வந்த மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர், நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி உள்ளிட்ட தென்மாவட்ட ங்களை சேர்ந்தவர்களும், கரூர் திருச்சி, தஞ்சாவூர், நாகை, புதுக்கோட்டை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களை சேர்ந்தவர்களும் என தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களை சேர்ந்த தொழிலாளர்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு சென்றனர்.

இந்தநிலையில் பொங்கல் விடுமுறை முடிந்த நிலையில் பஸ்கள், ரெயில்களில் சிரமமின்றி செல்ல நேற்று முன்தினம் முதல் தொழிலாளர்கள் திருப்பூர் திரும்ப ஆரம்பித்தனர். இன்று காலை பல்வேறு மாவட்டங்களில் இருந்து சாரை சாரையாக வந்தனர். அவர்கள் திருப்பூர் திரும்புவதற்கு வசதியாக நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, தேனி, மதுரை உள்பட பல்வேறு மாவட்டங்களில் இருந்து திருப்பூருக்கு சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டன.

இதனால் இன்று காலை திருப்பூர் ரெயில் நிலையம், கோவில்வழி பஸ் நிலையம், மத்திய பஸ் நிலையம், புதிய பஸ் நிலையங்களில் தொழிலாளர்கள், பயணிகள் கூட்டம் அலைமோதியது. ரெயில்களிலும் தொழிலாளர்கள் குடும்பம் குடும்பமாக வந்து இறங்கினார்கள். இதனால் திருப்பூர் ரெயில் நிலையத்திலும் கூட்டம் நிரம்பி வழிந்தது. அவர்கள் திருப்பூரில் இருந்து அவினாசி, பல்லடம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு செல்ல சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டன.

தொழிலாளர்கள் சொந்த ஊர்களுக்கு சென்றிருந்ததால் திருப்பூரில் வாகன போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் நடமாட்டம் குறைந்திருந்தது. தொழிற்சாலைகள், கடைகள் திறக்கப்பட்டதால் இன்று அதிகாலை முதல் திருப்பூர் நகரப்பகுதியில் உள்ள சாலைகள் மீண்டும் பரபரப்பான இயக்கத்

# நெல்லை, தென்காசி, தூத்துக்குடி மாவட்டங்களில் கனமழை: தலையணை அருவியில் குளிக்க தடை



நெல்லை, ஜன.22

நெல்லை, தென்காசி மாவட்டங்களில் மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளிலும், மணிமுத்தாறு வனப்பகுதிகளிலும் கடந்த ஒரு வாரமாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதேபோல் தூத்துக்குடி மாவட்டத்திலும் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது.

இன்று அதிகாலை நெல்லை, தென்காசி, தூத்துக்குடி மாவட்டங்களில் சில இடங்களில் மழை பெய்தது. இன்று காலை வரை அதிகபட்சமாக நெல்லை மாவட்டத்தில் சேர்வலாறு பகுதியில் 35 மில்லி மீட்டரும், பாபநாசம் பகுதியில் 28 மில்லி மீட்டரும், கன்னடியன் பகுதியில் 15.20 மில்லி மீட்டரும் மழை பெய்தது.

இதேபோல் நெல்லை, பாளையங்கோட்டை, மணிமுத்தாறு, களக்காடு, சேரன்மகாதேவி, மூலைக்கரைப்பட்டி, அம்பாசமுத்திரம், நாங்குநேரி உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் பரவலாக மழை பெய்தது.

மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் பெய்து வரும் மழை காரணமாக அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து காணப்படுகிறது. அந்த வகையில் சேர்வலாறு அணை நீர்மட்டம் நேற்று 117.05 அடியாக இருந்த நிலையில் இன்று மேலும் 4½ அடி உயர்ந்து 121.72 அடியாக உள்ளது.

இதேபோல் 143 அடி உச்ச நீர்மட்டம் கொண்ட பாபநாசம் அணையின் நீர்மட்டம் நேற்று 110 அடியாக இருந்த நிலையில் இன்றுமேலும் 1½ உயர்ந்து 111.40 அடியாக காணப்படுகிறது. நேற்று 99.92 அடியாக காணப்பட்ட மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் ½ உயர்ந்து 100.45 அடியாக உள்ளது.

பிரதான அணையான பாபநாசத்திற்கு வினாடிக்கு 1517 கன அடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. அணையில் இருந்து 400 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. நேற்று 600 கன அடி தண்ணீர் வந்த நிலையில் இன்று கூடுதலாக 900 கணஅடி தண்ணீர் கூடுதலாக வருகிறது.

இதேபோல் மணிமுத்தாறு அணைக்கு 1000 கன அடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. மழை காரணமாக தண்ணீர்வரத்து அதிகரித்துள்ளதால் சுற்றுலாப் பயணிகளில் நலன் கருதி கடந்த 5 நாட்களாக மணிமுத்தாறில் குளிக்க தடை விதிக்கப்பட்டிருந்தது. இன்று 6வது நாளாக அங்கு குளிக்க அனுமதிக்கபடவில்லை.

இதேபோல் களக்காடு தலையணையில் தண்ணீர் வரத்து அதிகரித்து தடுப்பணையை மூழ்கடித்த படி தண்ணீர் பாய்ந்து ஓடுவதால் நேற்று தலையணையில் குளிக்க களக்காடு வனத்துறை சார்பில் தடை விதிக்கப்பட்டிருந்தது. இன்று 2வது நாளாக தடை நீடிக்கிறது.

தென்காசி மாவட்டத்திலும் மழை தொடர்ந்து வருகிறது. அதிகப்பட்சமாக புளியங்குடியில் 44 மில்லி மீட்டரும், சிவகிரியில் 20 மில்லி மீட்டரும், ராமநதியில் 19 மில்லி மீட்டரும் மழை பாதிவாகி இருந்தது.

இதேபோல் தென்காசி, செங்கோட்டை, ஆய்க்குடி, கடனாநதி, கருப்பாநதி பகுதி, அடவிநயினார் பகுதி உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக மழை பெய்தது.

தூத்துக்குடி மாவட்டத்தில் சூரன்குடியில் 42 மில்லி மீட்டரும், கழுகுமலையில் 28 மில்லி மீட்டரும், வேடநத்தத்தில் 22 மில்லி மீட்டரும் மழை பதிவாகியது. இதேபோல் தூத்துக்குடி, ஒட்டப்பிடாரம், மணியாச்சி, கயத்தாறு, கடம்பூர், சாத்தான்குளம், திருச்செந்தூர், குலசேகரபட்டினம், ஸ்ரீவைகுண்டம், கோவில்பட்டி, எட்டயபுரம், விளாத்திகுளம், கீழ அரசரடி, காடல்குடி, வைப்பாறு உள்ளிட்ட மாவட்டத்தின் பெரும்பான்மையான பகுதிகளில் மழை பெய்தது.

மழை காரணமாக சில இடங்களில் சாலைகளில் தண்ணீர் தேங்கி உள்ளது. இதனால் பொதுமக்கள் பாதிப்படைந்தனர். தூத்துக்குடி திருச்செந்தூர் சாலை குண்டும், குழியாக காணப்படுகிறது. இதில் மழைநீர் தேங்கியதால் வாகன ஓட்டிகளுக்கு பள்ளங்கள் தெரியாததால் விபத்தில் சிக்கி வருகிறார்கள்.

இந்த சாலையில் மோட்டார் சைக்கிளில் சென்ற புதுமாப்பிள்ளை ஒருவர் விபத்தில் சிக்கி காயம் அடைந்தார். உடனடியாக இந்த சாலையை சீரமைக்க பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஈரோட்டில் 5ம் வகுப்பு மாணவி தூக்குப்போட்டு தற்கொலை

உடையாம்பாளையம், ஜன.22

ஈரோடு மாவட்டம் கோபி அருகே உள்ள உடையாம்பாளையத்தை சேர்ந்தவர் சரவணன். இவருடைய மனைவி மஞ்சுளா இவர்களுக்கு இரண்டு மகள்கள் உள்ளனர். அதில் மூத்த மகள், தாத்தா வீட்டில் தங்கி இருந்து 8ம்வகுப்புபடித்து வரும்நிலையில், தங்கையான அக்ஷயா பெற்றோருடன் இருந்துகொண்டு அந்த பகுதியில் உள்ள ஒரு பள்ளியில் 5ம் வகுப்பு படித்து வந்தாள்.

இந்த சூழலில், நேற்று முன்தினம் காலையில் வீட்டில் உள்ள சிறு சிறு வேலைகளை செய்யும் படி அக்ஷயாவிடம் மஞ்சுளா கூறியதாக தெரிகிறது. பின்னர் அவர் வேலைக்கு சென்றுவிட்டார். மாலையில் வேலை முடிந்ததும் வீட்டுக்கு வந்த மஞ்சுளா, சமையல் அறையில்துப்பட்டாவால் தூக்குப்போட்டு அக்ஷயா தொங்கி கொண்டிருந்தாள்.

அதைக்கண்டு அதிர்ச்சி அடைந்த அவர் உடனே அக்கம் பக்கத்தினர் உதவியுடன் அக்ஷயாவை மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். அங்கு பரிசோதனை செய்த டாக்டர்கள் ஏற்கனவே அக்ஷயா உயிரிழந்து விட்டாள் என்று தெரிவித்தனர். இந்த சம்பவம் குறித்து கோபி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஓ.எம்.ஆர். விடைத்தாளில் சில மாற்றங்களை செய்துள்ளது டிஎன்பிஎஸ்சி

சென்னை, ஜன.22

அரசு துறைகளில் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான காலி பணியிடங்களை நிரப்புவதற்கான போட்டித் தேர்வுகளை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (டி.என்.பி.எஸ்.சி.) நடத்தி வருகிறது. இந்த நிலையில், ஓ.எம்.ஆர். விடைத்தாளில் சில மாற்றங்களை டி.என்.பி.எஸ்.சி. செய்துள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

தேர்வாணையம் ஓ.எம்.ஆர்.(OMR)விடைத்தாளில் ஒரு சில புதிய நடைமுறையினை அறிமுகப்படுத்தியுள்ளது. புதிய ஓ.எம்.ஆர். விடைத்தாளின் மாதிரி படமானது தேர்வாணைய இணையதளத்தில் www.tnpsc.gov.in "OMR Answer Sheet Sample" என்ற தலைப்பின்கீழ் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

வினாத்தொகுப்பு எண் வட்டங்கள் கருப்புநிற பேனாவினால் (ballpoint pen) நிரப்புவது தொடர்பாகவும், மேலும், பக்கம்1ல் பகுதி1ன் கீழ் உள்ள கண்காணிப்பாளரின் கையொப்பம் பக்கம்2ல் பகுதி 1ன் கீழ் மாற்றப்பட்டுள்ளதும் மாதிரி விடைத்தாளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே. தேர்வர்கள் தேர்வாணையத்தினால் நடத்தப்படும் இனிவரும் தேர்வினை எழுத வருவதற்கு முன்பு புதிய ஓ.எம்.ஆர். விடைத்தாளின் மாதிரியை பார்த்து அறிந்து தேர்வு எழுத வருமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நெல் கொள்முதல்: மத்திய அரசுக்கு தமிழக அரசு கடிதம்



சென்னை, ஜன.22

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:


தமிழ்நாட்டில் பரவலாகக் பட்டநெல்கொள்முதல்திட்டத்தின் கீழ் 20022003 காரிப் பருவம் முதல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் முகவராக செயல்பட்டு ஆண்டுதோறும் அக்டோபர் முதல் நாள் முதல் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. வடகிழக்குப் பருவமழை காரணமாக செப்டம்பர் மாதம் முதல் நாளிலிருந்து கொள்முதல் செய்தல் டெல்டா விவசாயிகளுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதால் முதல்அமைச்சர்மு.க.ஸ்டாலின், பிரதமர்மோடிக்கு கடிதம் எழுதி 20222023 காரிப் சந்தைப் பருவத்திலிருந்து செப்டம்பர் முதல் நாளிலிருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

01.09.2024 முதல் 17.01.2025 வரை 1349 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 80,634 விவசாயிகளிடமிருந்து 5,72,464 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு 1378 கோடி ரூபாய் விவசாயிகளின் வங்கிக் கணக்கு எண்களுக்குச் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், நாளது தேதி வரை மத்திய அரசு அனுமதித்துள்ள 17 சதவீத ஈரப்பதத்தில் தொடர்ந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் வடகிழக்குப் பருவமழை இந்த ஆண்டு கால தாமதமாகத் தொடங்கியதாலும் தொடர்ச்சியாக வடகிழக்குப் பருவமழை பெய்து வருவதாலும் குறிப்பாக டெல்டா மாவட்டங்களில் கடந்த ஒருவார காலமாக விட்டு விட்டு கனமழை பெய்துள்ளதாலும் அறுவடை செய்யும் நெல் மணிகள் அதிக ஈரப்பதத்தில் உள்ளதாலும் வானம் மேகமூட்டத்துடனும், தொடர்ந்து பனிப்பொழிவுடனும் உள்ளதால் விவசாயிகள் நெல்லினை உலரவைக்கச் சிரமப்படுவதால் அதிக ஈரப்பதத்தில் உள்ள நெல் மணிகளைக் கொள்முதல் செய்ய விவசாயிகள், விவசாய சங்கத் தலைவர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கும் வகையில் தற்போது 17 சதவீத ஈரப்பதத்தில் நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என்பதைத் தளர்வு செய்து 22 சதவீத ஈரப்பதம் வரை நெல் கொள்முதல் செய்ய அனுமதி வழங்கக்கோரி மத்திய அரசுக்கு கடிதம்

# செங்கோட்டை அருகே வனப்பகுதியில் இறந்து கிடந்த புலி



செங்கோட்டை, ஜன.22

தென்காசி மாவட்டம் செங்கோட்டை அருகே கேரள எல்லையில் அமைந்துள்ள அச்சன்கோவிலை அடுத்த கல்லாறு பகுதியில் வனத்துறையினர் நேற்று ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது கல்லாறு ஊருக்கு அருகில் வனப்பகுதியில், உடல் அழுகிய நிலையில் ஆண் புலி கிடந்ததைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். இதுகுறித்து உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர். உடனே கொல்லம் மாவட்ட வன அலுவலர் மற்றும் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று பார்வையிட்டனர். கால்நடை டாக்டர்குழுவினர், இறந்த புலியின் உடலை ஆய்வு செய்தனர். இதில், இறந்தது சுமார் 13 வயதான ஆண் புலி என்றும், அது வயது முதிர்வின் காரணமாக இறந்திருக்கலாம் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும் புலியின் உடற்கூராய்வு அறிக்கை கிடைத்த பின்னரே அதன் இறப்புக்கான முழுமையான காரணம் தெரியவரும் என்றும் தெரிவித்தனர். உடற்கூராய்வுக்கு பின்னர் புலியின் உடலை வனப்பகுதியில் எரியூட்டினர். இதே போன்று கடந்த 2ந் தேதி அதே பகுதியில் 14 வயது மதிக்கத்தக்க பெண் புலி ஒன்று இறந்து கிடந்தது குறிப்பிடத்தக்கது.

# கனிமவளக் கொள்ளைக்கு எதிராக போராடிய சமூக ஆர்வலர் படுகொலை: விசாரணை வேண்டும் அன்புமணி

சென்னை, ஜன.22

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: புதுக்கோட்டை மாவட்டத்தில் கனிமவளக் கொள்ளைக்கு எதிராக போராடி வந்த ஜெகபர் அலி என்ற சமூக ஆர்வலர் கொடூரமான முறையில் சரக்குந்து ஏற்றி படுகொலை செய்யப்பட்டிருப்பது அதிர்ச்சியளிக்கி றது. முதலில் விபத்தாக காட்டப்பட்டு, பின்னர் கொலையாக மாற்றப்பட்ட இந்த வழக்கில் சிலர் கைது செய்யப்பட்டிருக்கும் போதிலும் உண்மைக் குற்றவாளிகளை காவல்துறை இன்னும் கைது செய்யவில்லை. புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் வெங்கலூரைச் சேர்ந்த ஜெகபர் அலி அப்பகுதிகளில் செயல்பட்டு வரும் சட்ட விரோத குவாரிகளுக்கு எதிராக போராடி வந்தார். அதற்காக சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடர்வது உள்ளிட்ட பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார். இந்த நிலையில்தான் கடந்த வெள்ளிக்கிழமை மதியம் தொழுகை நடத்தி விட்டு இரு சக்கர ஊர்தியில் திரும்பும் போது சரக்குந்தால் மோதப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். கொலை நடந்த விதத்தைப் பார்க்கும்போது அது திட்டமிடப்பட்ட ஒன்று என்பது தெளிவாகத் தெரிகிறது.

தமிழ்நாடு முழுவதுமே சட்ட விரோதமாக கனிமங்களை கொள்ளையடிக்கும் செயலில் ஈடுபட்டிருக்கும் கும்பல்கள் தனி சாம்ராஜ்யத்தை நடத்தி வருகின்றன. தூத்துக்குடி மாவட்டத்தில் சட்டவிரோத மணல் கொள்ளைக்கு எதிராக நடவடிக்கை எடுத்த கிராம நிர்வாக அதிகாரி ஒருவர் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டார். தமிழ்நாட்டின் பல இடங்களில் கனிமவளக் கொள்ளைக்கு எதிராக இருந்தவர்கள் மீது கொலை வெறித் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. இவ்வளவுக்குப் பிறகும் கனிமவளக் கொள்ளையர்களை தமிழக அரசு கட்டுப்படுத்தாததன் விளைவு தான் ஜெகபர் அலி போன்ற சமூக ஆர்வலர்கள் படுகொலை செய்யப்படுவதில் வந்து முடிந்திருக்கிறது. ஜெகபர் அலி படுகொலையின் பின்னணியில் இப்போது கைது செய்யப்பட்டிருக்கும் நால்வர் தவிர மேலும் பலர் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. இந்தக் கொலையின் பின்னணியில் உள்ள முழு சதியையும் வெளிக்கொண்டு வரப்படுவதையும், இதில் சம்பந்தப்பட்ட அனைவரும் கைது செய்யப்படுவதையும் உறுதி செய்ய இந்த வழக்கை சிறப்புப் புலனாய்வுக் குழு (எஸ்.ஐ.டி) விசாரணைக்கு தமிழக அரசு ஆணையிட வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# காணும் பொங்கல் விடுமுறையை ரத்து செய்ய பரிந்துரைக்க உள்ளதாக பசுமை தீர்ப்பாயம் எச்சரிக்கை

சென்னை, ஜன.22

சென்னை மக்கள் காணும் பொங்கலன்று (ஜன. 16) மெரீனா கடற்கரை உள்ளிட்ட சுற்றுலாப் பகுதிகளில் லட்சக்கணக்கானோர் குவிந்தனர். இந்த கொண்டாட்டத்தின்போது, பிளாஸ்டிக் பைகள் உள்ளிட்ட குப்பைகளை கடற்கரைகளிலேயே மக்கள் போட்டுச் சென்றதால் கடும் சுற்றுச்சூழல் பாதி ப்பு ஏற்பட்டது. பல நூறு டன் குப்பைகள் அகற்றப்பட்டது. இந்த நிலையில், மெரீனா கடற்கரை குப்பைக் கூளமாக மாறுவத ற்கு மக்கள்தான் காரணம் என்று தென்மண்டல தேசி ய பசுமை தீர்ப்பாயம் தெரிவித்துள்ளது. மேலும், காணும் பொங்கலன்று விடுமுறை அளிப்பதை ரத்து செய்யக் கோரி தமிழகஅரசுக்கு பரிந்துரைப்போம் என்று பசுமைதீர்ப்பாயம் எச்சரிக்கை விடு த்துள்ளது.

# 'நானும் மமிதாவும் பேசிக்கொள்வது இல்லையா?' வதந்திக்கு பதிலளித்த அனஸ்வரா ராஜன்



மலையாள திரை உலகில் சமீப காலமாக இரண்டு கதாநாயகிகள் இளைஞர்கள் மத்தியில் மிகப்பெரிய வரவேற்பு பெற்று வருகிறார்கள். வெற்றி படங்களில் நடித்து அடுத்த கட்டத்திற்கு முன்னேறி வருகிறார்கள். அவர்களில் ஒருவர் மமிதா பைஜு இன்னொருவர் அனஸ்வரா ராஜன்.

அனஸ்வராவும் மமிதாவும் 'சூப்பர் சரண்யா' என்கிற படத்தில் ஒன்றாக இணைந்து நடித்திருந்தார்கள். ஆனால் இப்போது அவர்கள் இருவருமே வளர்ந்து வருவதால் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வது இல்லை என்று இணையத்தில் செய்தி பரவியது.

இந்த நிலையில் சமீபத்திய பேட்டி ஒன்றில் அனஸ்வரா ராஜன் இந்த வதந்திக்கு முற்றுப்புள்ளி வைத்தார். அப்போது அவர் கூறுகையில்,

"நானும் மமிதா பைஜுவும் இதயபூர்வமான நட்புடன் பழகி வருகிறோம். நாங்கள் போட்டியாளர்கள் அல்ல. இன்னும் சொல்லப்போனால் எங்கள் குருப்பில் இருக்கும் மேத்யூ தாமஸ், நஸ்லேன், மமிதா உள்ளிட்ட அனைவருமே யாரும் யாரையும் போட்டியாக நினைப்பதில்லை. கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்தி அதில் எப்படி சிறப்பாக எங்களை வெளிப்படுத்த முடியும் என்பதைதான் பார்க்கிறோம். எதனால் இப்படி ஒரு செய்தி பரவியது என்று தெரியவில்லை" என்றார்.

# 'பாட்டல் ராதா' படத்தை பார்த்து அழுதுவிட்டேன் நடிகர் மணிகண்டன்




இயக்குனர் பா ரஞ்சித் தயாரிப்பில், அறிமுக இயக்குனர் தினகரன் சிவலிங்கம் எழுதி இயக்கியுள்ள திரைப்படம் பாட்டல் ராதா. இந்த படத்தில் குரு சோமசுந்தரம், சஞ்சனா நடராஜன், ஜான் விஜய் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். ஷான் ரோல்டன் இசையமைத்துள்ள இந்த படத்துக்கு ரூபேஷ் ஷாஜி ஒளிப்பதிவு செய்துள்ளார்.

இத்திரைப்படம் வருகிற 24ஆம் தேதி வெளியாக உள்ளது. அதே தேதியில் நடிகர் மணிகண்டன் நடித்துள்ள 'குடும்பஸ்தன்' திரைப்படமும் வெளியாக உள்ளது. இந்த நிலையில் குடும்பஸ்த்தின் படத்தின் டிரெய்லர் வெளியீட்டு விழாவின் போது நடிகர் மணிகண்டன் 'பாட்டல் ராதா' படத்தை பார்த்து அழுதுவிட்டதாக தெரிவித்துள்ளார்.


அதாவது "நான் ஒரு படத்தை பார்த்து அழுவது மிகவும் அரிது, ஆனால் பாட்டல் ராதா திரைப்படத்தை பார்த்து அழுதுவிட்டேன். அழக்கூடாது என நினைத்தேன், ஆனால் என்னால் அழாமல் இருக்க முடியவில்லை. இந்த திரைப்படம் மிகவும் அருமையாக இருக்கிறது. குரு சோமசுந்தரம் மிகச்சிறந்த நடிகர், இப்படம் மிகப்பெரிய வெற்றி பெறும்" என கூறியுள்ளார்.

# மிஸ்டர் ஹவுஸ் கீப்பிங் படத்தின் டிரெய்லர் வெளியீடு




பிரபலமான தயாரிப்பு நிறுவனமான ஸ்ரீ தேனாண்டாள் பிலிம்ஸ் 1985 முதல் படங்களை தயாரித்தும் வெளியிட்டும் வருகிறது. இந்த நிறுவனம் தயாரித்த விஜய்யின் 'மெர்சல்' திரைப்படம் நல்ல வரவேற்பை பெற்றது. அதற்கடுத்து 2023ல் தயாரித்த 'வல்லவனுக்கும் வல்லவன்' கலவையான விமர்சனங்களை பெற்றன. தற்போது இந்த தயாரிப்பு நிறுவனம் 'மிஸ்டர் ஹவுஸ் கீப்பிங்' என்ற படத்தை தயாரித்துள்ளது. இந்த படத்தில் பிக் பாஸ் நிகழ்ச்சியில் பங்கேற்றதன் மூலம் பிரபலமடைந்த லாஸ்லியா கதாநாயகியாக நடித்துள்ளார். இவர் 'பிரன்ட்ஷிப், கூகுள் குட்டப்பா' ஆகிய திரைப்படங்களில் நடித்துள்ளார். மேலும் இப்படத்தில் ஹரி பாஸ்கர் கதாநாயகனாக நடித்துள்ளார். ஸ்ரீ தேனாண்டாள் பிலிம்ஸின் 101வது படமான இதை, ஹேமா ருக்மணி தயாரித்துள்ளார். இப்படத்தை அருண் ரவிச்சந்திரன் இயக்கியுள்ளார். சமீபத்தில் இந்த படத்தின் பர்ஸ்ட்லுக் போஸ்டர், டீசர் மற்றும் பாடல்கள் வெளியாகி வைரலாகின. இப்படம் வரும் 24ம் தேதி வெளியாக உள்ளது. இந்த நிலையில் தற்போது இப்படத்தின் டிரெய்லர் வெளியாகி உள்ளது.

# ஆக்கி இந்தியா லீக்: பெங்கால் டைகர்ஸ் அணியை வீழ்த்தி திரில் வெற்றி பெற்ற சூர்மா கிளப்



6வது ஆக்கி இந்தியாலீக் ரூர்கேலாவில் நடைபெற்றுவருகிறது. இதில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் ஷராச்சி ரார் பெங்கால் டைகர்ஸ் சூர்மாகிளம் அணிகள் மோதின. இதில் முதல் பாதியில் 2 கோல்கள் அடித்து முன்னிலை பெற்றது.

இதனையடுத்து நடைபெற்ற 2வது பாதி ஆட்டத்தில் பெங்கால் டைகர்ஸ் முதல் கோலை பதிவு செய்தது. மேலும் அடுத்த கோல் அடிக்க முயற்சி மேற்கொண்டனர். இருப்பினும் 2வது கோல் அடிக்க முடியவில்லை. இதன் மூலம் சூர்மா கிளப் 21 என்ற கணக்கில் பெங்கால் டைகர்ஸ் அணியை வீழ்த்தி திரில் வெற்றியை பதிவு செய்தது. சூர்மா கிளப் தரப்பில் பிரப்ஜோத் சிங் மற்றும் மனிந்தர் சிங் தலா ஒரு கோல் அடித்தனர். பெங்கால் தரப்பில் ஜுக்ராஜ் சிங் மட்டுமே கோல் அடித்தார். இந்த போட்டியின் ஆட்ட நாயகனாக பிரப்ஜோத் சிங் தேர்வு செய்யப்பட்டார்.

# ரஞ்சி கோப்பை: ரகானே தலைமையில் களமிறங்கும் ரோகித் சர்மா



சமீபத்தில் நடந்த நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலிய டெஸ்ட் தொடர்களில் இந்திய அணி தோல்வி கண்டது. இதில் ரோகித்சர்மா, விராட்கோலி உள்ளிட்ட பேட்ஸ்மேன்கள் சோபிக்கவில்லை. தோல்வி எதிரொலியாக ரோகித் சர்மா உள்ளிட்ட வீரர்கள் மீது கடும் விமர்சனங்கள் எழுந்தன. தொடர்ந்து நல்ல நிலையில் இருப்பதற்கு உள்ளூர் போட்டிகளில் வீரர்கள் அனைவரும் விளையாட வேண்டும் என்று முன்னாள் வீரர்கள் பலரும் வலியுறுத்தினர். இதையடுத்து உடல் தகுதி பிரச்சினை இல்லாத சமயத்தில் உள்ளூர் போட்டிகளில், கிரிக்கெட் வாரியத்தின் ஒப்பந்த வீரர்கள் அனைவரும் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என்று பி.சி.சி.ஐ. அறிவுறுத்தியது.

இந்நிலையில் நடப்பு ரஞ்சி கோப்பை கிரிக்கெட் தொடரின் அடுத்த கட்ட லீக் சுற்றுகள் 23ம் தேதி தொடங்குகின்றன. இதில் 'ஏ' பிரிவில் அங்கம் வகிக்கும் மும்பை அணி, தனது அடுத்த லீக் ஆட்டத்தில் ஜம்முகாஷ்மீரை சந்திக்கிறது.

இந்த போட்டிக்கான மும்பை அணி நேற்று அறிவிக்கப்பட்டது. ரகானே தலைமையிலான அந்த அணியில் ரோகித் சர்மா மற்றும் ஜெய்ஸ்வால் ஆகியோர் களமிறங்க உள்ளனர்.

மும்பை அணி விவரம்: ரகானே (கேப்டன்), ரோகித் சர்மா, ஜெய்ஸ்வால், அயூஷ் மாத்ரே, ஸ்ரேயாஸ் ஐயர், சித்தேஷ் லாடு, ஷிவம் துபே, ஹர்திக் தாமோர், ஆகாஷ் ஆனந்த், தனுஷ் கோட்டியான், ஹிமான்சு சின்ஹ், ஷர்துல் தாகூர், மோஹித் அவஸ்தி, சில்வெஸ்டர் டிசோசா, ராய்ஸ்டன் டயஸ், கர்ஷ் கோத்தாரி.

# ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்; டி மினார் காலிறுதிக்கு முன்னேற்றம்



இந்தியாவில் நடைபெறும் உள்ளூர் டி20 தொடரான ஐ.பி.எல்.ன் 18வது சீசன் வரும் மார்ச் 21ம் தேதி தொடங்க உள்ளது. 10 அணிகள் கலந்து கொள்ளும் இந்த தொடருக்கான வீரர்களின் மெகா ஏலம் சவுதி அரேபியாவின் ஜெட்டா நகரில் 2 நாட்களாக ( கடந்த நவம்பர் 24 & 25ம் தேதிகளில்) நடைபெற்றது. இந்த ஏலத்தில் 577 வீரர்கள் பங்கேற்றனர். மொத்தத்தில் 62 வெளிநாட்டவர் உள்பட 182 வீரர்கள் ரூ.639.15 கோடிக்கு விற்கப்பட்டனர்.

ஆனால் இந்த ஏலத்தில் இடம்பெற்றிருந்த இந்திய வேகப்பந்து வீச்சாளரான உமேஷ் யாதவை எந்த அணியும் எடுக்கவில்லை. சமீப காலங்களில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாத அவர் 2023 ஐ.பி.எல் தொடரில் கொல்கத்தா அணியில் நன்றாக பவுலிங் செய்தார். ஆனால் கடந்த ஐ.பி.எல் தொடரில் குஜராத் அணியில் அவர் சுமாராகவே பவுலிங் செய்தார். அதன் காரணமாக 2025 ஐபிஎல் ஏலத்தில் எந்த அணியும் அவரை வாங்கவில்லை.

இந்நிலையில், ஐ.பி.எல் ஏலத்தில் தம்மை எந்த அணியும் வாங்காதது ஏமாற்றமளிப்பதாக உமேஷ் யாதவ் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, இந்த வருட ஐ.பி.எல் தொடரில் நான் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பது அனைவருக்கும் தெரியும். 15 வருடங்களாக விளையாடிய எனக்கு அது ஆச்சரியமாக இருக்கிறது. நான் ஏன் பொய் சொல்ல வேண்டும்?. ஆம். அதற்காக நான் சோகமாக உணர்கிறேன். சுமார் 150 ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடிய நீங்கள் தேர்வு செய்யப்படாமல் போனால் அப்படித்தான் இருக்கும்.

இருப்பினும் அது ஐ.பி.எல் அணிகளின் திட்டங்களைப் பொறுத்தது. என்னுடைய பெயர் ஏலத்தின் கடைசி நேரத்தில் தான் வந்ததால் ஐ.பி.எல் அணிகளிடம் போதுமான பணம் இல்லாமல் இருந்திருக்கலாம். இறுதியில் ஏலத்தில் வாங்கப்படாததால் நான் விரக்தியை சந்தித்தேன். இருப்பினும் பரவாயில்லை. நான் எந்த முடிவையும் மாற்ற முடியாது.

காயத்துக்காக நான் காலில் அறுவை சிகிச்சை மேற்கொண்டேன். என்னால் முடியும் என்று உணரும் வரை 140 கிலோ மீட்டர் வேகத்தில் பவுலிங் செல்வேன். என்னால் முடியாத போது கிரிக்கெட்டில் இருந்து யாரிடமும் சொல்லாமல் எனக்கு நானே விலகிக் கொள்வேன். இவ்வாறு அவர் கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.